ப.செ.எண்:149

தங்கம் தென்னரசு
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 16-10-2007

## பத்திரிகைச் செய்தி

பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் பள்ளி நேரங்களில் செல்போன் பயன்படுத்துவதால் அவர்களது கவனம் முழுக்கக் கல்வி கற்பதிலிருந்து திசை திரும்புகின்றது எனவும், இதன் காரணமாக ஆசிரியர்களின் கல்வி கற்பிக்கும் திறனும் வீணடிக்கப்படுகின்றது என்றும் பல கல்வியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் அரசின் கவனத்திற்கு தொடர்ந்து கொண்டு வந்துள்ளனர். மேலும் பாடங்களில் கவனத்தை முழுமையாகச் செலுத்தாமல் செல்போன் மூலம் குறுஞ்செய்தி அனுப்புவதில் கவனம் செலுத்தும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

2. பள்ளிக் கூடங்களில் செல்போன் பயன்படுத்துவதை முழுமையாக தடை செய்வதினால் மாணவர்கள் மிகுந்த பயனடைவதுடன் கல்வியில் நல்ல அக்கறை செலுத்துவார்கள்; ஆசிரியர்களின் கல்வி கற்பிக்கும் திறமையை முழுமையாக பயன்படுத்திக் கொண்டு சிறந்த மாணவர்கள் உருவாக வாய்ப்பு உண்டு என்று கருதுவதால் தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் மாணவ / மாணவியர் வயது வரம்பின்றி செல்போன் கொண்டுவருவதைத் தடை செய்வது குறித்து அரசு பரிசீலித்தது.

3. இந்நிலையில், தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் பயிலும் மாணவ / மாணவியர்கள் வயது வரம்பின்றி பள்ளி வளாகங்களுக்குள் செல்போன் கொண்டு வருவதை தடை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. அரசின் இம்முடிவிற்கேற்ப மாணவ / மாணவியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

(தங்கம்தென்னரசு)
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.